DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.

Case No. STC.No.744/2023

**Deposition of PW.1– வீரமுத்து, த/பெ. வீரசங்கிலி**

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **16 day April 2025**

எதிரி ஆஜர் இல்லை. மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தேவர் சிலை அருகில் எத்தனை மணிக்கு ரோந்து செய்தேன் என்றால் காலை சுமார் 9.00 மணிக்கு. காவல்நிலையத்திலிருந்து எத்தனை மணிக்கு ரோந்து பணிக்கு கிளம்பினேன் என்றால் காலை 8.50 மணி. ரோந்துப்பணி எங்கள் அலுவல் பணி சார்ந்தது என்றால் சரிதான் . அலுவல் பணி சம்மந்தமாக சென்றால் நாங்கள் எங்களது பாக் டைரியில் அதுகுறித்து குறிப்பு செய்வோம் என்றால் சரிதான். இந்த வழக்கு தொடர்பாக ரோந்து சென்றது பற்றி குறித்து வைத்துள்ளேனா என்றால் குறித்து வைத்துள்ளேன் . இந்த வழக்கு சம்மந்தமாக நான் குறிப்பு செய்த அந்த நோட்புக்கை காவல் சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை . இந்த வழக்கில் சொன்னவாறு நான் எந்தவித ரோந்துப்பணியும் செல்லவில்லை என்றும் , அதனால்தான் நான் நோட்புக்கை ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல . யாரிடம் விசாரித்து எதிரியின் பெயரை தெரிந்து கொண்டேன் என்பது பற்றி போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை . இந்த வழக்கில் குறிப்பிடப்பட்ட நான்கு எதிரிகளும் அ.ம.மு.க. கட்சியில் முக்கிய பொறுப்பில் உள்ளவர்கள் என்றால் சரிதான். நான் இந்த வழக்கு தொடர்பாக தேவர்சிலைக்கு அருகில் எந்த இடத்தில் பேனர் வைக்கப்பட்டுள்ளது என்பதை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் தேவர்சிலைக்கு பின்பு இருந்ததாக

சொல்லியுள்ளேன். தேவர்சிலைக்கு பின்பு பழைய பேருந்துநிலையம் செல்லும் ரோடு உள்ளது என்றால் சரிதான். அந்த ரோட்டிற்கு பின்புறம் 24 மணிநேரமும் செயல்படக்கூடிய காவல் பூத் உள்ளது என்றால் சரிதான் . அதேபோல் தேவர்சிலை என்பது ஆட்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். இந்த வழக்கில் சொல்லப்பட்ட பேனரை நானோ, சார்பு ஆய்வாளரோ கைப்பற்றினோமா என்றால் இல்லை. நாங்கள் பேனரை அது எந்த கடையில் அடிக்கப்பட்டது என்ற விபரத்தை பார்த்து தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. அந்த பேனரில் எத்தனை நபர்களின் புகைப்படம் இருந்தது என்பது பற்றியும், அது எத்தனை அளவுகளில் இருந்தது என்பது பற்றியும் போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை . அந்த பேனர் மாட்டப்பட்டிருந்ததா, ஒட்டப்பட்டிருந்ததா என்பதை எனத போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை . நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் , நான் சம்பவ இடத்திற்கே செல்ல வில்லை என்றும் சொன்னால் சரியல்ல . ஆளுங்கட்சியினரின் தூண்டுதலின்பேரில் இந்த வழக்கு பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் காவல்நிலையத்தில் பணிபுரிவதால் எங்கள் காவல்நிலைய புள்ளி விபரக்கணக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட பொய் வழக்கிற்காக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

C PALANIVELRAJAN

Digitally signed by C PALANIVELRAJAN
Date: 2025.04.16 17:06:15 +0530

Judicial Magistrate,
Bodinayakanur.